# In the Court of the District Munsif, Eraniel

**Original Suit No. 70/2022** **Date:23.10.2025**

**(DW1)- ஐயாசாமி**

வாதி தரப்பு குறுக்கு விசாரணை

1. வழக்கு பட்டிகை சொத்திற்கு எந்த திசையில் என்னுடைய சொத்து உள்ளது என்றால் மேற்கு பக்கம் உள்ளது, அது பூர்வீக சொத்தாகும். மேற்படி சொத்து உயிலில் வாதிக்கும் எனக்கும் தலா 1.25 சென்ட் என்று குறிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நானும் வாதியும் மேற்படி சொத்தை பாதி பங்குகளாக அனுபவித்து வருகிறேன் என்றால் சரிதான். என்னுடைய சொத்திற்கும் வாதியின் சொத்திற்குமிடையே மண் வேலி உள்ளது என்றால் சரிதான். மேற்படி மண் வேலியின் அடிப்படையில் எனது சொத்தை பிரித்து எடுப்பதில் எனக்கு ஆட்சேபணையில்லையென்றால் சரிதான், ஆட்சேபணையில்லை.

2. மேற்படி மண் வேலி பல வருடங்களுக்கு முன்பு அமைக்கப்பட்டது என்றால்சரியல்ல, எனது அம்மா 19.05.1993 ல் உயில் எழுதிய பின்பு அமைக்கப்பட்டது. எனது சொத்திற்கு வடக்கு பக்கம் ஒரு ரோடு செல்கிறது என்றால் சூரையாண்டி குளத்திலிருந்து ஆத்து முடிப்பு வரை செல்லக்கூடிய பாதையாகும். மேற்படி பாதை அமைக்கப்பட்டு சுமார் 2 வருடம் இருக்கும் என்றால் 3 வருடம் இருக்கும். மேற்படி சாலை வடக்கு பக்கம் உள்ள சொத்தில் அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதி மற்றும் என்னுடைய சொத்தை பிரிப்பதற்கு எல்கை கற்கள் இல்லையென்றால் சரியல்ல, தற்போது அளவீடு செய்து உட்பிரிவு செய்யப்பட்டு 1.25 சென்டிற்கு எனது பெயருக்கு பட்டா பெற்றுள்ளேன், ஆனால் கற்கள் நடப்படவில்லை.

3. வாதியின் 1.25 சென்டும் தனியாக உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். வாதி அவரின் சொத்தின் எல்கையை நிர்ணயம் செய்வதில் எனக்கு ஆட்சேபணையில்லையென்றால் சரிதான், ஆட்சேபணையில்லை. வாதி எல்கை நிர்ணயம் கேட்டு தாக்கல் செய்துள்ள இந்த வழக்கை அனுமதிக்கலாம் என்றால் அனுமதிக்கலாம்.

**2** ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

1. நான் காவல்துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளேன் என்றால் சரிதான். நான் தற்போது எங்கு வசித்து வருகிறேன் என்றால் சென்னையில் வசித்து வருகிறேன். வழக்கு பட்டிகை சொத்தில் எனக்கும் வாதிக்கும் தலா 1.25 சென்ட் பாத்தியம் என்றால் சரிதான். மீதமுள்ள 2.5 சென்ட் சொத்து 2ம் பிரதிவாதியின் தந்தைக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். 2ம் பிரதிவாதியின் தந்தை செட்டில்மெண்ட் ஆவணத்தின் படி 2 ம் பிரதிவாதிக்கு சொத்தை உரிமை மாற்றம் செய்துள்ளார் என்றால் சரிதான். 2 ம் பிரதிவாதிக்கு உரிமைப்பட்ட சொத்தில் நான்கு பக்க எல்கைகள் அமைக்கப்பட்டு கம்பி வேலி அமைத்து 2 ம் பிரதிவாதியின் அனுபவத்தில் உள்ளது என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை**.**

( ஒப்பம் )
மாவட்ட உரிமையியல் நீதிபதி
இரணியல்